தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் ஐம்பதாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1975, ஏப்ரல் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Demotion of permanent teachers in the newly started High Schools in Madurai Corporation.

*232 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the **Minister for** Education be pleased to state—

(*a*) whether it is a fact that the permanent teachers **employed** in the Madurai Corporation, promoted and posted in the **newly-started** High Schools were demoted; and

(*b*) if so, whether the Government will order their restoration?

மதுரை மாநகராட்சியில் புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி களில் பணிக்கமர்த்தப்பட்ட நிரந்தர ஆசிரியர்கள் பதவியிறக்கம்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகராட்சியில் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று, புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் பணிக்கமர்த்தப் பட்ட நிரந்தர ஆசிரியர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், மீண்டும் அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) **and** (இ): **1973** அக்டோபரை ஒட்டி மதுரை மாநகராட்சிக்கு பள்ளிக் கல்வித் துறை "ஐந்து இலட்சம் பேருக்கு வேலை" திட்டத்தின் கீழ் சில ஆசிரியர் பதவிகளை ஒதுக்கியது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட பதவிகளை நிரப்புகையில் அதற்கு முன் அந்தத் திட்டப் பதவிகளைவிடக் கீழான தரத்தைச் சார்ந்த ஆளுல் முறையான பதவிகளில் பணி செய்து வந்தவர்கள் சிலருக்கும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு அவர்களும் "ஐந்து இலட்ச வேலை" திட்டப்பதவி களில் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு **1974** ஆம் ஆண்டு கோடை விடுமுறைச் சம்பளம் கொடுக்கும் பொழுது, **1973**

அக்டோபருக்கு முன் என்ன முறையான பதவிகள் வகித்து வந்தனரோ அந்தப் பதவிகளுக்குரிய கோடை விடுமுறைச் சம்பளத்தையே கொடுக்க வேண்டும் என்ற பொதுவான அரசாணையைப் பின்பற்றி மதுரை மாநகராட்சியும் நடவடிக்கை எடுத்தது. 1974ஆம் ஆண்டு கோடை விடு முறைக்குப் பின் பள்ளிகள் திறந்ததும் அவர்களுக்கு கோடை விடு முறைக்கு முன் என்ன தர "ஐந்து இலட்சம் பேருக்கு வேலை" பதவி யிலிருந்தனரோ அதே தரத்தில் முறையான பதவி அளிக்கப்பட்டுவிட்டது.

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவர் அவர்களே, 1973-ல் ஆரம்பிக் கப்பட்ட பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப் பட்டு, தலைமையாசிரியர்களாகவும், இடைநிலை ஆசிரியர்களாகவும், முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களாகவும் மற்றும் சிறப்பாசிரியர்களாகவும் நிய மிக்கப்பட்டார்கள். ஆனால் விடுமுறையிலே அவர்களுக்கு பண இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு பண இழப்பு ஏற்பட்டதற்குக் காரணம் அவர்கள் "ஐந்து இலட்சம் ஊழியர் வேலை வாய்ப்பிலே" மாற்றப்பட்டது. அடுத்தாண்டு துவக்கத்திலும் கொடுக்கப் படவேண்டிய ஊதிய உயர்வு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்தத் தலைமை ஆசிரியர்கள் அனை வரும் 5 இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் புகுத்தப்பட்டது நியாயமா? அப்படி இருக்குமானால், இந்த இரண்டு வகையிலும் இழப்பு ஏற்படாத முறையில் அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஊதிய உயர்வு பெறுவதுபற்றி நாம் தனியாக ஆராய்ந்து கணக்கு எடுக்க வேண்டியிருக்கிறது. மூன்று மாதக் கோடைகாலச் சம்பளம் என் கின்றபோது, அதுவும் "டெம்பரரி" என்று வருகின்ற போது, அந்த மூன்று மாதத்திற்கும் ஏற்கனவே இருந்த சம்பளத்தை வழங்கிக் கொண் டிருந்தார்கள். இல்லாவிட்டால் அவர்கள் வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டும். இன்கிரிமெண்ட் கொடுப்பதற்கு அந்த மூன்று மாதத்தை யும் சேர்த்துக்கொள்ளலாமா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

Grant to the Madras University.

*233 Q.—Thiru K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu have sanctioned a grant of Rs. 10 lakhs to the University of Madras to enable it to conduct the centres of advanced studies in three subjects including Physics; and

(*b*) if so, whether it is a fact that the University Grants Commission offered substantial financial help to the University for establishing an Institute of Advanced Studies in Physics and later withdrew the financial help as it was not implemented by the University?